1973 டிசம்பர் 4]

நாகப்பட்டினம்-தேமங்கலம் சாலையில் பாலம்

*621 வினா—திரு. அ. இராசமாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-தேமங்கலம் சாலையில் தேவநதியின் குறுக்கே பாலமொன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை..

திரு. அ. இராசமாணிக்கம்: அந்தப் பகுதியில் இருக்கிற பத்து கிராமங்களை இணைக்கும் அந்தப் பாலம் மிகவும் அவசியம் என்ற அந்தப் பகுதி மக்களின் அக்கோரிக்கையை மறுபரிசிலனை செய்து ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பரிசிலனை செய்யப் பட்டு 1974-75-ம் ஆண்டு அந்தத் திட்டத்தை பார்ட் 2 ஸ்கீமில் சேர்ப்பதற்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

கவிஞர் வேதநாயகம் அவர்களுக்கு நினைவுச்சின்னம்

*622 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரத்தில், கவிஞர் வேதநாயகம் பெயரில் நகராட்சிப் பூங்காவில் மண்டபம் ஒன்று கட்டிட அடிக்கல் நாட்டப் பட்டிருப்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

நாகர்கோயில் பகுதியில் புதிய பேருந்து வழித்தடங்கள்

*623 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துத்துறை நாகர்கோயில் ஜாயிண்ட் டைரக்டர் அவர்கள் அதிகாரத்துக்குட்பட்ட பகுதிகளில் 1973-74 நிதியாண்டில் புதிதாக பஸ் ரூட்கள் ஏதேனும் தொடங்கப் பட்டிருக்கின்றனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?